**DATE: 04.06.2025** சாட்சி விசாரணை தொடங்கிய நேரம்: 02.57PM

MCOP NO: 168/2023

ம.சா.1

பெயர். திரு. பிரவீன்ராஜ்

த/பெ. திரு. ராஜேந்திரன்

வயது. 31

<u>**முதல் விசாரணை**</u>

<u>**முதல் விசாரணை வழக்கறிஞர் பிரித்திவிராஜ் என்பவர் விசாரணை செய்தார்.**</u>

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 13 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் பூபாலன் என்பவர் குறுக்கு விசாரணை செய்தார்**</u>

எனக்கு விபத்தானது 13.10.2022 அன்று நடந்தது. விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. புகாரை எனது தகப்பனார் தான் கொடுத்தார். அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை. எனக்கு விபத்து ஏற்பட்டு ஒன்பது நாட்கள் கழித்து தான் காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டது. நான் முதல் நாளே மருத்துவமனையில் வந்து என்னை போலீசார் விசாரித்தார்கள். நான் மருத்துமவனையில் 3 நாட்கள் தான் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்று வந்தேன். எனது முதல் தகவல் அறிக்கையில் விபத்தினை ஏற்படுத்திய வாகனம் பதிவு எண் தெரியாத வாகனம் என்றும் unknown vehicle என்று காட்டப்பட்டுள்ளது. நான் சொல்லும் ஆட்டோவினால் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆட்டோ ஒட்டுநருடன் விபத்து ஏற்பட்டது என்பதை காட்ட ஆவணம் இல்லை என்று சொன்னால் ஆட்டோ மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது அதன் பதிவு எண் சொல்லவில்லை. மேலே சொல்லப்பட்ட ஆட்டோவானது விபத்திற்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது

வருமானம், தொழில் ஆகியவற்றை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சாியல்ல. வருமானத்தை காட்ட மசாஆ 10 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்ற பின்னிட்டு தொடா் சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை. மனுவில் சொல்லப்பட்ட ஆட்டோவிற்கும், இந்த விபத்திற்கும் எந்தவித சம்மதமும் இல்லை என்பதாலும் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சாியல்ல. எனக்கு இந்த விபத்தினால் வருமான இழப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் சாியல்ல. இந்த வழக்கில் மோட்டாா் வாகன ஆய்வாளா் அறிக்கை தாக்கல் செய்யவில்லை. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. அதனால் 2ம் எதிா்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சாியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

சாட்சி விசாரணை முடியுற்ற நேரம் : 03.10P.M